செ.வெ.எண் :29/மார்ச் நாள்:20.03.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## நாளை முதல் மருந்தகம் மற்றும் உணவு சார்ந்த நிறுவனங்கள் மட்டுமே திறக்க அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கொரோனா வைரஸ் காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (20.03.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை உலகளாவிய நோய் தொற்றாக (Pandemic) அறிவித்துள்ளது. அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள். அந்தவகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பாதிப்பு முற்றிலும் இல்லை என்ற போதிலும் அண்டை மாநிலங்களிலிருந்து இந்நோய் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்திட வேண்டும். அதன் ஒரு பகுதியாக ஏற்கனவே கோயில்கள், பள்ளி, கல்லூரிகள் மற்றும் சுற்றுலாத்தலங்கள் நமது மாவட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மருந்தகம் மற்றும் உணவு சார்ந்த நிறுவனங்களைத் தவிர மற்ற அனைத்து நிறுவனங்களும் நாளை (21.03.2020) முதல் அடைக்கப்பட வேண்டும்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக மாவட்ட அளவில் 33 மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலமாக மாவட்ட எல்லைகளிலுள்ள 9 சோதனைச் சாவடிகளில் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் மக்களை கண்காணிக்கவும், 15 குழுக்கள் மண்டல வாரியாகவும் பொதுமக்களிடம் கொரோனா வைரஸ் பற்றிய அச்சத்தை தவிர்த்திடும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அண்டை நாடுகளிலிருந்து திரும்பியவர்களை தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் தினந்தோறும் 3 முறை கிருமிநாசினியால் சுத்தம் செய்து கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்ளும் அனைவரும் தகுந்த பாதுகாப்பு உபரகணங்களுடன் பணியாற்றிட வேண்டும். நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளும் குழுக்கள் தாங்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும், நோய் அறிகுறி இருக்கும் நபர்கள் அறியப்பட்டால் அவர்களின் முழு விவரங்களையும் மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதல்வர், சுகாதாரப்பணிகளின் இணை இயக்குநர் அவர்களுக்கு விரைந்து தகவலை தெரிவிக்க வேண்டும். அவர்களை உடனடியாக அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று உரிய சிகிச்சையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அவர்களைச் சார்ந்த நபர்களை கண்டறிந்து அவர்களையும் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். இதுபோன்ற காலங்களில் மக்களுக்காக பணியாற்றுவதை மிகுந்த பொறுப்புடன் அனைவரும் ஒன்றாக இணைந்து பணியாற்றிட வேண்டும்.

மேலும், பொதுமக்கள் தனிநபர் சுகாதாரம் பேணும் வகையில் தொடர்ந்து சோப்பு, சானிடைசர் பயன்படுத்தி சில நேரங்களுக்கு ஒருமுறை கைகளை கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை விடுமுறை நாட்களில் குழுவாகக் கூடி விளையாடுவதை தவிர்ப்பது, தனுஷ்கோடி, கடற்கரைகள் உள்ளிட்ட பொழுதுபோக்கை கழிக்கும் இடங்களுக்கு கண்டிப்பாக பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். மேலும் வயது முதியவர்கள், எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள் கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். சாதாரண மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு பொதுமக்கள் செல்வதை தவிர்க்க வேண்டும். மருந்தகங்கள் மற்றும் உணவகங்களுக்கு செல்லும் பொதுமக்கள் போதிய இடைவெளி விட்டு செல்லுமாறும், அங்கு தேவையின்றி அதிக நேரம் செலவழிப்பதை தவிர்க்க வேண்டும். மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை தொடர்பாக ஆற்றிய உரையில் வரும் 22.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மக்களால் மக்களுக்காக ஊரடங்கு (Janata Curfiew) உத்தரவு பிறப்பித்தது போல கருதிக் கொண்டு அன்றைய தினம் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை யாரும் வீட்டை விட்டு வெளியில் வர வேண்டாம் என்று கூறியதை ஒவ்வொரு தனிமனிதனும் கருத்தில் கொண்டு அன்றைய தினம் செயல்பட வேண்டும். இவ்வாறு மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு மனதுடன் தங்களது பங்களிப்பை அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் மரு.எம்.அல்லி, சுகாதாரப்பணிகளின் இணை இயக்குநர் மரு.பி.வெங்கடாசலம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.தங்கவேலு உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**